DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | | | |
|---|---|---|---|---|
| Calender | : | CC No. 599/2025 | | |
| Miscellaneous | : | | | |
| Preliminary Register | : | | | |
| Sessions | : | | | |
| Deposition of Witness for Prosecution | : | L.W.1 | P.W.1 | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | செல்வக்குமார் | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | காளியப்பகவுண்டர் | ஜாதி | : | |
| கிராமம் | : | | இனம் | : | |
| தாலூக்கா | : | | வயது | : | |
| Mail ID | : | | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 02.03.2026

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தாந்தோணி துங்காவியில் வசித்து வருகிறேன். Genuine Auto Care என்ற பெயரில் பழனி ரோட்டில் ஆட்டோ கன்சல்டிங் கடை நடத்தி வருகிறேன்.பயன்படுத்திய இரு சக்கர வாகனத்தை வாங்கி விற்கும் வேலை செய்து வருகிறேன். கடந்த 15.11.2025 ம் தேதி மாலை 3.00 மணியளவில் என் கடைக்கு மஞ்சள் கலர் சட்டை அணிந்து கருப்பு கலர் ஜீன்ஸ் அணிந்து வந்த ஒரு நபர் வண்டி வேண்டும் என்று கூறினார். அப்போது நான் வேறு ஒரு வாடிக்கையாளரை பார்த்து கொண்டிருப்பதால் காத்திருக்குமாறு கூறினேன். பின்னர் 10 நிமிடம் கழித்து என் மேலாளர் நவின் என்பவர் என்னிடம் வந்து அந்த நபர் பல்சர் NS 160 வாகனத்தை எடுத்து செல்வதாகவும் வண்டி பேசி விட்டிர்களா என்று கேட்டார். நான் பேச வில்லை வேறு ஒரு வாடிக்கையாளரை பார்த்து கொண்டிருந்ததால் 10 நிமிடம்காத்திருகக சொன்னேன் என்று கூறினேன். பல்சர் NS 160 வாகனத்தின் எண் TN 78 S 9225 ஆகும். அதன் சாவி வண்டியிலேயே இருந்தது. பார்ட்டிடி வந்தால்

காண்பிப்பதற்காக சாவி வண்டியிலேயே இருந்தது. அந்த நபர் லோக்கல் என்று சொன்னார். அந்த நபர் தன் பெயர் சிவக்குமார் என்று கூறினார். ஏற்கனேவே நண்பர்களுடன் ஒரு சில மாதங்களுக்கு முன் கடைக்கு வந்திருந்தார். பின்னர் அவர் லோக்கல் என்று சொன்னதால கடையில் உள்ள நபர்களை வைத்து தேடினோம். மறுநாள் அவரது ஊர் பெரிய கோட்டை பிரிவு என்று தகவல் கிடைத்தது. அவர் வீட்டிற்கு சென்று விசாரித்த போது சிவக்குமார் வீட்டிற்கு வருவதில்லை என்று கூறினார்கள். அதனால் அக்கம் பக்கம் தேடிவிட்டு காவல் நிலையம் சென்றுபுகார் கொடுத்தோம். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். புகார் என்னுடைய மேலாளர் நவின் என்பவர் எழுதியது. **புகார் அசா.ஆ .1 என குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தார்கள். வண்டி அடுத்த நாள் கிடைத்து விட்டதாக சொன்னார்கள். எங்கள் கடையில் இருந்து வந்து வண்டி எடுத்தவரை என்னால் அடையாளம் காட்ட இயலும். நீதிமன்றத்தில் ஆஜரான எதிரி தான் அவர். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள வாகனம் தான் எங்கள் கடையில் இருந்து திருடி சென்ற வாகனம் ஆகும். **வாகனத்தின் புகைப்படம் அசா.ஆ.2 என குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**</u>

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T.Nithyakala, B.Com.,B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.

**DEPOSITION OF WITNESS**
**Judicial Form No. 53**
**(See Rule 42)**
(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 599/2025 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Prosecution | : | L.W. 2 P.W.2 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | நவின் பிரபு | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | கனகராஜ் | ஜாதி | : | |
| கிராமம் | : | | இனம் | : | |
| தாலூக்கா | : | | வயது | : | |
| Mail ID | : | | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 02.03.2026

**முதல் விசாரணை**

1. நான் உடுமலை வரதராஜபுரத்தில் வசித்து வருகிறேன். Genuinue Auto Care என்ற பெயரில் பழனி ரோட்டில் ஆட்டோ கன்சல்டிங் கடையில் மேலாளராக பணிபுரிந்துவருகிறேன். அசா.1 கடையின் உரிமையாளர் ஆவார். .பயன்படுத்திய இரு சக்கர வாகனத்தை வாங்கி விற்கும் வேலை செய்து வருகிறோம். கடந்த 15.11.2025 ம் தேதி கடையின் உரிமையாளர் வேறு ஒரு வாடிக்கையாளரை பார்த்து கொண்டிருந்த போது நான் வேறு அலுவலில் இருந்து கடைக்கு வந்த போது கடைக்கு வெளியே ஆஜர் எதிரி சிவக்குமார் நின்று கொண்டிருந்தார். பல்சர் NS 160 TN 78 S 9225 வாகனத்தை எடுத்தார். எடுத்து ஓட்டிப் பார்ப்பதாக சொன்னார்.
2. பின்னர் நான் உரிமையாளரிடம் போய் சொன்ன போது நான் வேறு வாடிக்கையளாரை பார்த்து கொண்டிருப்பதாக 10 நிமிடம் காத்திருக்குமாறு கூறியதாக கூறினார். ஆனால் அதற்குள் வண்டியை எடுத்து சென்றுவிட்டார். 10 நிமிடம் காத்திருந்தோம் ஆனால் அவர் வரவில்லை . ஆஜர் எதிரி லோக்கல் என்று சொன்னார். அந்த நபர் தன் பெயர் சிவக்குமார் என்று கூறினார்.

ஏற்கனேவே நண்பர்களுடன் ஒரு சில மாதங்களுக்கு முன் கடைக்கு வந்திருந்தார். பின்னர் அவர் லோக்கல் என்று சொன்னதால கடையில் உள்ள நபர்களை வைத்து தேடினோம். மறுநாள் அவரது ஊர் பெரிய கோட்டை பிரிவு என்று தகவல் கிடைத்தது. அவர் வீட்டிற்கு சென்று விசாரித்த போது சிவக்குமார் வீட்டிற்கு வருவதில்லை என்று கூறினார்கள். அதன் பிறகு 21 ம் தேதி கடையின் உரிமையாளர் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தார். புகாரை அசா.1 சொல்ல சொல்ல நான் எழுதினேன். என்னிடம் காட்டப்படும் அசா.ஆ.1 ல் உள்ள கையெழுத்து என்னுடையது தான். நான் எழுதியது தான். போலிசார் என்னை விசாரித்தார்கள். மறுநாள் 22 ம் தேதி வாகனம் கிடைத்து விட்டதாக போலிசார் சொன்னார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை</u>**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T.Nithyakala, B.Com.,B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.

DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 599/2025 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Prosecution | : | L.W.3 P.W.3 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஜனார்த்தனன் | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | பழனிசாமி | ஜாதி | : | |
| கிராமம் | : | | இனம் | : | |
| தாலூக்கா | : | | வயது | : | |
| Mail ID | : | | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 02.03.2026

**முதல் விசாரணை**

நான் தாந்தோணியில் வசித்து வருகிறேன். Genuine Auto Care என்ற பெயரில் பழனி ரோட்டில் உள்ள கடையில் வேலை செய்து வருகிறேன். கடந்த 21.11.2025 ம் தேதி அசா.1 எனது ஓனர் பைக் திருட்டுசம்பந்தமாக புகார் கொடுத்திருந்தார். அது சம்பந்தமாக போலிசார் கடைக்கு வந்து மேப் போட்டார்கள். கடை விவரங்களை எழுதி கொண்டார்கள். அதற்கு ஆதரவாக சாட்சி கையொப்பம் கேட்டார்கள். நானும் செல்லதுரையும் விவரங்களை தெரிந்து கொண்டு சாட்சி கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையது தான். **பார்வை மகசர் அசா.ஆ.3 என குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. கையெழுத்து போட்ட ஆவணத்தில் உள்ள விவரம் தெரியும் என்றால் சரிதான். படம் வரைந்ததில் தான் கையெழுத்து செய்திர்கள் என்றால் ஆமாம், அந்த இடம் ஒர்க்ஷாப் எங்குள்ளது என்று கேட்டார்கள், பழனி ரோட்டில் உள்ளது என்று சொன்னேன். நீங்கள் மட்டும தான் கையெழுத்து செய்திர்கள் என்றால் நானும்

செல்லத்துரையும் கையெழுத்து போட்டோம். செல்லதுரை உங்களுக்கு என்ன உறவு என்றால் எனது நண்பர் ஒரே ஊர்க்காரர். எத்தனை மணிக்கு எந்த தேதியில் கையெழுத்து போட்டிர்கள் என்றால் 21 ம் தேதி டைம் என்று சரியாக தெரியவில்லை. போலிசார் கேட்டு கொண்டதற்கு இணங்க காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து போட்டிர்கள் என்றால் சரியல்ல. போலிசார் உங்களை விசாரிக்கவில்லை என்றால் ஆமாம்.

மறுவிசாரணை இல்லை

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T.Nithyakala, B.Com.,B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.

DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 599/2025 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Prosecution | : | L.W. 5 P.W.4 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சிவக்குமார் | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | ஈஸ்வரன் | ஜாதி | : | |
| கிராமம் | : | | இனம் | : | |
| தாலுக்கா | : | | வயது | : | |
| Mail ID | : | | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 02.03.2026

**முதல் விசாரணை**

1. நான் பழனியாண்டவர் நகரில் வசித்து வருகிறேன். திருப்பூர் தொழில் பாதுகாப்பு குழுவில் மேலாளராக வேலை செய்து வருகிறேன். கடந்த 22.11.2025 ம் தேதி காலை 8.30 மணிக்கு நானும் எனது நண்பர் அன்பரசன் என்பவரும் இரு சக்கர வாகனத்தில் குணஸ்ரீ லாட்ஜ் அருகில் வந்த போது போலிசார் வாகனங்களை நிறுத்தி வாகனத்தை சோதனை செய்து கொண்டிருந்தார்கள்.
2. பின்னர் எங்கள் வாகனத்தையும் நிறுத்தி வாகனத்தின் ஆர்சி புக், இன்சூரன்ஸ் லைசன்ஸ் ஆகிய விவரங்களை கேட்டார்கள். நாங்கள் எடுத்து காண்பித்தோம். அப்போது ஒரு பல்சர் வாகனம் வேகமாக வந்தது. போலிசாரை பார்த்ததும் வேகமாக சென்றதை போலிசார் தடுத்து நிறுத்தி அந்த வாகனத்தில் வந்தவரிடம் ஆர்சி புக், இன்சூரன்ஸ் லைசன்ஸ் ஆகிய விவரங்களை கேட்ட போது அவர் தடுமாறிவிட்டு அந்த வாகனத்தை திருடி கொண்டு வந்ததாக ஒப்பு கொண்டார். அவர் பெயர் சிவக்குமார் என்றும் பெரியகோடடை பிரிவு என்றும் சொன்னார். ஆஜர் எதிரி தான் அவர்.
3. பின்னர் போலிசார் எதிரி சொன்ன ஒப்புதல் வாக்குமூலத்தை

அங்கேயே லேப்டாப்பில் தட்டச்சு செயது பெண்டிரைவ் மூலமாக பிரவுசிங்க் சென்டருக்கு சென்று பிரிண்ட் அவுட்எடுத்து வந்து எதிரியிம் கையொப்பம் பெற்றார்கள். நானும் அன்பரசனும் சாட்சி கையொப்பம் செய்தோம். எதிரி 4 கையெழுத்து செய்தார். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1 வது கையெழுத்து என்னுடையது தான். **ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1வது சாட்சி கையெழுத்து அசா.ஆ.4 என குறியீடு செய்யப்படுகிறது.** என்னிடம் காட்டப்படும் படிவம் 91 ல் இடமிருந்து வலத்தில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையது தான். **படிவம் 91 அசா.ஆ.5 என குறியீடு செய்யப்படுகிறது.** என் முன்னிலையில் பல்சர் பைக்கை எதிரி ஆஜர் படுத்தினார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. என்ன படித்துள்ளிர்கள் என்றால் DME படித்துள்ளேன். போலிசார் விசாரித்தாக சொல்லியுள்ள நிலையில் முதல் விசாரணையில் சொன்னதை தான் போலிசார் விசாரணையிலும் சொன்னிர்கள் என்றால் ஆமாம். கடையில் பிரிண்ட் எடுததாக சொல்லியுள்ள நிலையில் எந்த கடை என்றால் அது பற்றி தெரியாது, போலிசார் பக்கத்து கடையில் சென்று பிரிண்ட் எடுத்து வந்தார்கள்.
2. கையெழுத்து போட்ட ஆவணத்தில் உள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியும். எந்த தேதியில் எங்கு வைத்து கையெழுத்து போட்டிர்கள் என்றால் 22 ம் தேதி குணஸ்ரீ லாட்ஜ் அருகில் வைத்து. அந்த வண்டி எண் தெரியாது என்றால் தற்போது ஞாபகம் இல்லை. எத்தனை மணிக்கு கையெழுத்து செய்திர்கள் என்றால் காலை சுமார் 8.30–9.00 மணிக்குள் இருக்கும். அவர் வண்டியை எத்தனை மணிக்கு ஒப்படைத்தார் என்றால் சுமார் 9.00 மணி இருக்கும்.
3. எதிரி உங்கள் முன்னிலையில் எந்த ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றாலும் நீங்கள் அந்த வழியாக வந்ததால் போலிசார் கேட்டு கொண்டதற்கு இணங்க கையொப்பம் செய்திர்கள் என்றாலும் சரியல்ல. நீங்கள் மேலாளராக உள்ள நிலையில் , காவல் நிலையத்திற்கு அடிக்கடி செல்விர்கள் என்றால் இல்லை. புகார்தாரர் செல்வக்குமார் உங்களுக்கு தெரியும் என்றால் தெரியாது.

மறுவிசாரணை இல்லை

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T.Nithyakala, B.Com.,B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.